கூட்ட எண் 02
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 17.05.2018.

**2018-ம் ஆண்டு மே மாதம் 17.05.2018 ந் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

**1.** ஆரணி நகராட்சி 11.62 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 33 வார்டுகளை கொண்டு 2011 ம் ஆண்டின் படி மக்கள் தொகை 63263 கொண்டுள்ள முதல் நிலை நகராட்சியாகும், இந் நகராட்சியை சுற்றி சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்க்ள் உள்ளன, அக்கிராமங்களில் இருந்து தினசரி சுமார் 10000 பேர் வந்து செல்கின்றனர். மேலும், நகராட்சியில் தினசரி நாளொன்றுக்கு 27 மெட்ரிக் டன் குப்பை சேகரமாகிறது. சேகரமாகும் குப்பைகளை நகராட்சிக்கு சொந்தமான 2.80 ஏக்கர் எருகிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. உரகிடங்கில் பல வருடங்களாக உள்ள மரபு வழிக் கழிவுகள் (Lagacy Waste) ஏறக்குறைய முழு பரப்பளவிற்கும் சேகரம் செய்யப்பட்டு உள்ளது. தற்பொழுது மேற்படி மரபு வழிக் கழிவுகள் மிகுந்த துர்நாற்றம் வீசுவதுடன், பொது மக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் மிகுந்த கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது.. மேலும், கோடைக் காலத்தில் அடிக்கடி தீப்பற்றி எரிவதாலும், குப்பைகளை கொட்டுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே சேகரமாகியுள்ள மரபு வழிக் கழிவுகளை தாது பொருட்களாக (BIO MININIG) மாற்றும் முறையில் தீர்வு செய்திடவும், 2.80 ஏக்கர் நிலப் பரப்பினை மீண்டும் உபயோகத்திற்கு கொண்டுவரவும், ரூ.110.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கும், இப்பணியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி, திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேலும், மதிப்பீடு ரூ. 110.00 இலட்சத்தில் ஏற்கனவே தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் இப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.103.80 இலட்சம் போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம் (கோப்பு எண் 999 /இ1/2017)

2. இந் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-2019 முதல் 2020-2021 ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 17-05-2018 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்களை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல விபரம் | உச்ச ஏலத் தொகை கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர், முகவரி மற்றும் தொகை ரூ. | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் உரிமை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்கவில்லை | - | - |
| 2 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு காபி, முறுக்கு, இட்லி, ரொட்டி, பழம் ஆகிய இதர தட்டுக்கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 5 | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளிய மரங்கள், இலவம் பஞ்சு மரங்கள், மா மரங்கள், தென்னை மரங்களின் மேற்பயனை மட்டும் அனுபவித்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 6 | புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | P.ஆனந்தன், த/பெ பூங்காவனம் 517 காந்தி நகர், அரையாளம், ஆரணி தாலுக்காக | 180000/- | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | 148000/.- | 155523/- |
| 7 | சூரியகுளம் மீன் பிடித்தல் குத்தகை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 8 | பழைய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |

**அலுவலக குறிப்பு** :- 1. வரிசை எண் 6க்கு திரு. P.ஆனந்தன் என்பவர் சென்ற ஆண்டைவிட ரூ. 32000/- கூடுதலாகவும், மூன்று ஆண்டு சராசரியை விட ரூ. 24477/- கூடுதலாக ஏலம் கோரியுள்ளார். எனவே, இவரது உச்சக் கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம். மேலும், பணி உத்தரவு வழங்கலாம். 2.. வரிசை எண் 1,2,3,4,5,7,8, ஆகிய இனங்களுக்கு ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை. மேற்படி இனங்களுக்கு மறு ஏலம் கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.. (ந.க.எண். 206/அ3/2018)

3. ஆரணி நகராட்சி 11.62 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 33 வார்களில் 15935 குடியிருப்புகள் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டின்படி மக்கள் தொகை 63263 கொண்டுள்ள முதல் நிலை நகராட்சியாகும். இந் நகராட்சியை சுற்றி சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அக்கிராமங்களிலிருந்த தினசரி சுமார் 10000 பேர் வந்து செல்கின்றனர். மேலும், நகராட்சியில் தினசரி நாளொன்றுக்கு 27மெட்ரிக் டன் குப்பை சேகரமாகிறது. இந் நகராட்சி பகுதியில் சுமார் 167 தெருக்களில் சேகரமாகும் குப்பைகளை தற்போது நகராட்சியில் பணிபுரியும் 105 துப்புரவு பணியாளர்களை கொண்டு இலகு ரக தள்ளு வண்டிகள் 62 எண்கள் மூலம் முதல் நிலை சேகரிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணி சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக 15 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் வாங்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019ன் கீழ் ரூ.27.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் 12 அவர்களின் மின்னஞ்சலில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. ஆரணி நகராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 7000 குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்குவதற்கான இனத்தினை மதிப்பீட்டிலிருந்து விடுத்து மீதமுள்ள இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள 15935 மொத்த சொத்துவரி விதிப்பு எண்ணிக்கையில் ஏற்கனவே உள்ள 5717 குடிநீர் இணைப்புகளை தவிர்த்து 7427 வரிவிதிப்புதாரர்களுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ- 250.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி, கருத்துருக்கள் சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | மொத்த சொத்துவரி வரிவிதிப்புகள் | ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகள் | வழங்கப்பட வேண்டிய குடிநீர் இணைப்புகள் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆரணி | 15935 | 5717 | 7427 | 250.00 |

அலுவலக குறிப்பு :- 1. அனுமதிக்கலாம். 2. மதிப்பீடு தொகை ரூ.250.00 இலட்சம் நிதியினை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 139/இ1/2018)

5. இந் நகராட்சியின் 2017-2018ஆம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிகளுக்கான ஆண்டு கணக்குகள் தயார் செய்தமைக்கான செலவினம் தொகை ரூ.50000/-ஐ திரு. கே. சர்தார் பாஷா NUHAA CONSALTANCY திண்டிவனம் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 1187/2018/பி2)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

கூட்ட எண் 03
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 23.05.2018.

**2018-ம் ஆண்டு மே மாதம் 23.05.2018 ந் தேதி புதன் கிழமை மாலை 4.00மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

4. இந் நகராட்சியில் 2009 - 2010 முதல் 2010- 2011 வரை பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ- 32,350/- திரும்ப வழங்க கோரி திருமதி ஹேமாவதி ஒப்பந்ததாரர் விண்ணபத்துள்ளார். எனவே, மேற்கண்ட வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், தணிக்கை தடை ஏதும் இல்லாத காரணத்தினாலும், மேற்கண்ட தொகையை வழங்கலாம். (கோப்பு எண் 38/2018/பி4)

5. இந் நகராட்சியில் 2008 - 2009 முதல் 2014 - 2015 வரை பல்வேறு பணிகளுக்கு Additional Deposit 1% தொகை ரூ. 264661/- திரும்ப வழங்க கோரி திருமதி ஹேமாவதி ஒப்பந்ததாரர் விண்ணபித்துள்ளார். எனவே, மேற்கண்ட வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், தணிக்கை தடை ஏதும் இல்லாத காரணத்தினாலும், மேற்கண்ட தொகையை வழங்கலாம். (கோப்பு எண் 359/2018/பி4)

6. இந் நகராட்சியில் 2009 - 2010ம் ஆண்டு பல்வேறு பணிகளுக்கு பினை வைப்புத் தொகை ரூ.52655/-ஐ திரும்ப வழங்க கோரி சாமி எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், தணிக்கை தடை ஏதும் இல்லாத காரணத்தினாலும், மேற்கண்ட தொகையை வழங்கலாம். (கோப்பு எண் 360/2018/பி4)

7. இந் நகராட்சியில் 2010 - 2011 முதல் 2012 - 2013 வரை பல்வேறு பணிகளுக்கு பினை வைப்புத் தொகை ரூ. 135944/- திரும்ப வழங்க கோரி திருமதி. ஹேமாவதி ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட பினை வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும், உதவி பொறியாளர் குறிப்பில் மனதாரர் கோரியுள்ள பணிகள் முடிக்கப்பட்டு தற்போது 1வருடத்திற்கு மேல் நல்ல நிலையில் உள்ளது. பிடித்தம் செய்த பினை வைப்புத் தொகையை விடுவிக்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட தொகையை வழங்கலாம். (கோப்பு எண் 361/2017/பி4)

8. ஆரணி நகராட்சியில் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக பழுதுள்ள சாலைகளை, தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேம்படுத்த மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர் அவர்களின் அலுவலக தொலைபேசி தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்காணும் சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன, அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற உரிய பிரேரணை அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | **வார்டு எண் 01 சி.எஸ்.ஐ சர்ச் பின்புறம்,தார்சாலை மற்றும் சிறுபாலம், ஜெயம் நகர் தார்சாலை, வார்டு எண் 21 பாதர் சுபேதார் தெரு தார்சாலை, வார்டு எண் 25 பாலாஜி நகர் தார்சாலை, வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், கே.பி.கே நகர், பாஸ்கர் நகர், மற்றும் எம்.ஜி.ஆர் நகர் தார்சாலை, அமைத்தல்** | 100.00 **லட்சம்** |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர் அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1113/இ1/2018)

9. மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 03.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 31ல் உள்ள நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்கு பின்புறம் நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மைய (தினசரி 4டன் அளவிற்கு திடக்கழிவு கையாளுதல்) கட்டிடம் கட்டும் பணி | 40.00 | ஏ.ஆர்.அசோக்குமார்<br>எஸ். உஷாராணி | 4.97 % அதிகம்<br>5,29 % அதிகம் |
| 2 | வார்டு எண் 13ல் உள்ள கண்ணப்பன் நகர் (சபாஷ்கான் தெரு)ல் நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மைய (தினசரி 4டன் அளவிற்கு திடக்கழிவு கையாளுதல்) கட்டிடம் கட்டும் பணி | 40.00 | எஸ். உஷாராணி<br>கே. லக்ஷ்மணன் | 4.94 % அதிகம்<br>9.37 % அதிகம் |
| 3 | வார்டு எண் 25ல் உள்ள பாலாஜி நகர் பகுதியில் நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மைய (தினசரி 4டன் அளவிற்கு திடக்கழிவு கையாளுதல்) கட்டிடம் கட்டி சுற்றுச் சுவர் அமைத்தல் பணி | 43.00 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 4.95 % அதிகம்<br>5.68 % அதிகம் |
| 4 | வார்டு எண் 29ல் உள்ள காந்தி நகர் பகுதியில் நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மைய (தினசரி 4டன் அளவிற்கு திடக்கழிவு கையாளுதல்) கட்டிடம் கட்டும் பணி | 38,00 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 4.97 % அதிகம்<br>5.74 % அதிகம் |
| 5 | வார்டு எண் 30ல் உள்ள ஜெயலட்சுமி நகர் பகுதியில் நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மைய (தினசரி 4டன் அளவிற்கு திடக்கழிவு கையாளுதல்) கட்டிடம் கட்டி சுற்றுச் சுவர் அமைத்தல் | 57.00 | எஸ். உஷாராணி<br>கே. லக்ஷ்மணன் | 4.93 % அதிகம்<br>7.13 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | | |
| 6 | ஏற்கனவே உள்ள உரக்கிடங்கிற்கு செல்லும அனுகு சாலையினை சிமெண்ட் தளமாக அமைத்தல் | 14.40 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்ககோவன் | 4.96 % அதிகம்<br>5.49 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் வரிசை எண் 1க்கான ஒப்பந்தப்புள்ளியில் திரு. A.R.அசோக்குமார் அவர்கள் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ளார். வரிசை எண் 02 மற்றும் 5ம் எண்ணிற்கான பணிகளுக்கு திருமதி. S.உஷாராணி அவர்கள் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மீதமுள்ள பணிகளான வரிசை எண் 3,4, மற்றும் 6ம் எண் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. P.சந்திரசேகர் அவர்கள் குறைவாக ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார். மேலும், வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள், ஆனால், 5% ற்கு குறைவாக கொடுத்துள்ளமையாலும் அரசின் திட்டப் பணியான காரணத்தினாலும் காலதாமத்தினை தவிற்கும் பொருட்டு முதல் அழைப்பாக இருப்பினும் இதனை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.. மேலும், இப்பணி திட்டப் பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண் 999/இ1/2017)

10. இந் நகராட்சிக்கு 2018-2019ஆம் ஆண்டிற்கு தேவையான கீழ்க்கண்ட விவரப்படியான எழுது பொருட்கள், பதிவேடுகள், படிவங்கள் போன்றவை தற்பொழுது இருப்பு இல்லாததால், இப் பொருட்களை அவசர அவசியம் கருதி **Tamil Nadu Multipurpose Indco Serve Trichy - 620 008** என்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கிக் கொள்ள அதனால் ஏற்படும் தோராய செலவினம் ரூ.4.00.000/-க்கு மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A4 பேப்பர் | 150ரிம் |
| 2 | லீகல் பேப்பர் | 60ரிம் |
| 3 | ஃபைல் பேடு | 250 |
| 4 | மூடு தாள் | 5000 |
| 5 | ஸ்டேம்ப் பேட் | 50 |
| 6 | ஸ்டேப்லர் பெரியது | 5 |
| 7 | ஸ்டேப்லர் சிறியது | 50 |
| 8 | வைப்பு பதிவேடு | 30 |
| 9 | நோட்டு புத்தகம் - ரூல்டு | 50 |
| 10 | கம் பாட்டில் | 25 |
| 11 | D & O படிவம் | 1 to 1000 |
| 12 | பெயர் மாற்றம் படிவம் | 1 to 1000 |
| 13 | பிறப்பு அறிக்கை படிவம் | 50 |
| 14 | இறப்பு அறிக்கை படிவம் | 20 |
| 15 | 4A Medical Cause of Death | 200 |
| 16 | Office Cover | 1000 |
| 17 | S.R. Cover | 250 |
| 18 | குண்டு ஊசி | 20 பாக்கெட் |
| 19 | ரப்பர் பேண்டு | 10 பாக்கெட் |
| 20 | P.F. பதிவேடு | 10 |
| 21 | Permanent Advance - பதிவேடு | 10 |
| 22 | M.Book - 25Page | 100 |
| 23 | M.Book - 50Page | 50 |
| 24 | M.Book - 100Page | 20 |
| 25 | பிறப்பு சான்று பதிவேடு | 1 to 50000 |
| 26 | இறப்பு சான்று பதிவேடு | 1 to 30000 |
| 27 | கட்டிட அனுமதி பதிவேடு | 10 |
| 28 | கட்டிட உரிமப் பதிவேடு | 10 |

| | | |
|---|---|---|
| 29 | M.L.பதிவேடு | 15 |
| 30 | புகார் பதிவேடு | 20 |
| 31 | Cover 10X5 | 1000 |
| 32 | Writing Pad | 20 |
| 33 | 200 Ruled Note | 50 |
| 34 | Payment Book | 25 |
| 35 | குடிநீர் இணைப்பு விண்ணப்ப படிவம் | 1 to 1000 |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்காணும் நிறுவனம் கூட்டுறவு நிறுவனத்தை சார்ந்துள்ளதால், மேற்காணும் பொருட்கள் நேரடியாக கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் பி3/ 2018)

11. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 10,05,2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>வருவாய் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம்<br>திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி அலுவலக வளாக கணினி அறையில் மின் வயரிங், குளிர்சாதன பெட்டி,புதியதாக குழல் விளக்குகள், மும்முனை மெயின் சவிட்ச், கேபிள் அமைத்தல் பணி | **1.60** | பி.சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 0.03% குறைவு<br>0.50%. அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான எருகிடங்கில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி, நீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் | **2.00** | பி.சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 0.05% குறைவு<br>0.80%. அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்உபகரணங்கள் சப்ளை செய்தல் | **3.50** | வெங்கட்எண்டர்பிரைசஸ் மன்னார்குடி<br>ஸ்ரீஜா எலக்ட்ரிகல்ஸ் மதுராந்தகம் | 0.06% குறைவு<br>2.39%. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. சந்திரசேகர் மற்றும் வெங்கட்எண்டர்பிரைசஸ், மன்னார்குடி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேற்படி பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

12. இந் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்து தற்போத திருவத்திபுரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திரு. ஆர்.வேலவன் என்பவர், ஆரணி நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில், சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P. No. 26109/2011 மற்றம் M.P. 1/2011, தீர்ப்பு 20.02.2018ல் மனுதாரர் திரு. ஆர்.வேலவன் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது. மேற்படி தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யுமாறு இந்நகராட்சியின் சார்பில் இவ்வழக்கினை நடத்திடும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. பால்ராஜ் என்பவர் 18.04.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி வழக்கினை நடத்திடவும், வழக்கு கட்டணமாக ரூ. 25000/-(எழுத்தால் ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) யினை கோரி கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகையினை வழக்கு கட்டணமாக வழங்க மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழக்கினை நடத்திட, மேற்படி வழக்கறிஞருக்கு தொகை வழங்கியதை ஏற்கலாம். (கோப்பு எண் 8541/2006/சி1)

13. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 33 வார்டுகளிலும் கால்வாயில் வளரும் கொசுக்களை ஒழிக்க Fanthion (Bratex) 82.5% 50லிட்டர் வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 1.50.000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண். 1052/2018/எச்1)

14. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக மாலையில் முதிர்வு கொசுக்களை அழிக்க பைரத்திரயம் 2% Extract மருந்து 300 லிட்டர் வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.3.75.000/- லட்சத்திற்க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண். 1052/2018/எச்1)

15. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு DBC பணியாளரை கொண்டு ஏடிஸ் வகை கொசுப்புழுக்களை அழிக்க 50 லிட்டர் அபேட் கொசு மருந்து வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.50.000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 1052/2018/எச்1)

16. இந் நகராட்சியில புதிய குடிநீர் இணைப்பு வேண்டி திருமதி. G.சின்ன குழந்தை நெ. 27/114-2 கார்த்திகேயன் ரோடு ஆரணி என்பவரின் விண்ணப்பம் செய்து இணைப்புக்கான தொகை ரூ.7190/-யை 09.03.2010ல் செலுத்தியுள்ளார். உதவிப் பொறியாளர், ஆரணி நகராட்சி மேற்படி குடியிருப்பு பகுதிக்கு பகிர்மான குழாயில் போதிய அழுத்தம் இல்லாததால் குடிநீர் இணைப்பு வழங்க இயலவில்லை என குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட தொகையை திரும்ப வழங்க கோரி 02.08.2017ல் மனதாரர் விண்ணப்பித்துள்ளார். அன்னார் இருக்கும் பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையில் அவர் செலுத்திய தொகை ரூ. 7190/- ஐ திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 1218/2018/அ2)

17. ஆரணி நகராட்சி பகுதியில் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை தலைமையிடமாக கொண்டு மாவட்ட வருவாய் கோட்டம் அமைத்து காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆரணி நகராட்சி சார்பாக நமது அம்மா தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான விளம்பர கட்டணம் ரூ. 25121/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

18. இந்நகராட்சிக்குட்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பது சம்பந்தமாக கடந்த 12.04.2018 அன்று தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில், எந்தவித ஆட்சேபனைகளும் மற்றும் கருத்துக்களும் எழப்படவில்லை என்பதையும், மேற்கண்ட கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 2243/அ1/2018)

19. ஆரணி நகராட்சி பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள போதிய தளவாட பொருட்கள் தற்போது இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால், பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் எதிர்வரும் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1260/எச்1/2018)

20. ஆரணி நகராட்சி பகுதிகளில் அரசு விழாக்கள், மற்றும் பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் கால்வாய் ஓரங்களில் நோய் தடுப்பு பணிக்காக சுண்ணாம்புநீர், பிளிச்சீங் பவுடர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால், பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் எதிர்வரும் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கு தேவையான சுண்ணாம்புநீர், பிளிச்சீங் பவுடர் வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1259/எச்1/2018)

21. ஆரணி நகராட்சியில் பிரதான வாயிற் கதவு மற்றும் உள்புறத்தில் உள்ள இரண்டு பெரிய இரும்பு கிரில் கேட் 2 எண்ணிக்கை ஆகியவை பழுதுற்று இயக்க முடியாத நிலையில் மிகவும் பழுதுற்றுள்ளது. நகராட்சியில் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மேற்காணும் இரும்பு கதவுகளை பழுதுகள் சரி செய்து பராமரிப்பு பணிகள் செய்து வண்ணம் தீட்டும் பணிகள் செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 20000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரி பணியினை செய்து முடிக்கவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

22. ஆரணி நகராட்சிக்கு குடிநீர் நீரேற்றும் செய்யும் செய்யாற்றுப் படுகையில் அமைந்துள்ள தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பாலத்தின் மீது வரும் நீரேற்றம் குழாய் “8” DI PIPE ஜாயின்டில் நிர்க் கசிவு ஏற்பட்டு பெருமளவில் குடிநீர் வீணாகிறது. மேற்படி பழுதுள்ள இடத்தில் உள்ள குழாயின் அமைப்பினை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது அதற்காகும் செலவினம் மதிப்பீடு ரூ.50000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

23. ஆரணி நகராட்சியில் 2018-2019ஆம் ஆண்டில் பல்வேறு திட்டப் பணிகளான தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள், புதிய குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்குதல், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் போன்ற திட்டப் பணிகளுக்கு பிரேரணை அனுப்ப பணிகள் வரைபடம், நகராட்சி வரைபடம், கலர் பிரிண்டர்ஸ், மதிப்பீடுகள் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரலாம் ஆணையர் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பிரேரணைகள் தயாரிக்கும் நிலையில் கலர் பிரிண்ட் எடுத்தல், பைண்டிங் செய்தல், வடிவமைப்பு பெருதல்,போன்ற தேவையான பணிகளுக்கு அவ்வப்போது விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் செலவினத்தை மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று செய்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

24. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழைய, புதிய பேருந்து நிலையங்களில் உள்ள நம்ம டாய்லெட், நகரில் உள்ள அனைத்து வார்டுகளில் உள்ள பொது சுகாதார கழிப்பறைகள், சமுதாய கழிப்பிடங்கள், அரசு, நகராட்சி பள்ளிகள், சமுதாய கூடங்கள், மாட்டிறைச்சி தொட்டிகள், தினசரி கால்வாய் அகற்றும் இடங்கள், அரசு விழாக்கள் ஆகிய இடங்களில் பொது மக்கள் நலன் கருதி சுத்தம் செய்ய தேவையான பினாயில் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கு வாங்கி கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1,50,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1258/எச்1/2018)

25. ஆரணி நகராட்சி பகுதியில் தினசரி நாளொன்றுக்கு 27 மேட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகிறது. சேகரமாகும் திடக்கழிவுகள் அனைத்தும் நகராட்சிக்கு சொந்தமான வேலப்பாடி கிராமத்தில் உள்ள எருகிடங்கில் கொண்டு சேர்க்கப்பட்டு வருகிறது. அவ்விடத்தில் குப்பைகள் அதிக அளவில் சேர்ந்துள்ளதாலும், குப்பைகளை உட்புறம் கொண்டு சேர்க்க வாகனம் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளதால், சேகரமாகியுள்ள குப்பைகளை ஒதுக்குபுறமாக JCB இயந்திரம் கொண்டு சமன்படுத்தினால் மட்டுமே இனிவரும் காலங்களில் குப்பைகளை கொட்ட இயலும். எனவே, தனியார் நிறுவனத்தின் மூலம் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கு 768 மணி நேரம் JCB இயந்திரத்தை கொண்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1258/எச்1/2018)

26. ஆரணி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40HP மின் மோட்டார் மற்றும் 5HP மின் மோட்டார் ஆகிய மின்மோட்டார்கள் ரீவைண்டிங் மற்றும் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது.. அதற்கான உள்ளூர் நிறுவவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.30000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1258/எச்1/2018)

27. ஆரணி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் தச்சூர் தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள ஆழ்துளை கிணற்றில் சிக்கியுள்ள 5HP மின் மோட்டார்கள் 2 எண்ணிக்கை வெளியில் எடுத்து காயில் கட்டி சர்வீஸ் செய்து மீண்டும் பொருத்த வேண்டியுள்ளது அதற்கான உள்ளூர் நிறுவவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.30000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1258/எச்1/2018)

28. ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தில் பழுதாகியுள்ள உபகரணங்கள் பொருத்தி பழுது சரி செய்து மீண்டும் இயக்கி தர வேண்டியுள்ளது. அதற்கான உள்ளூர் நிறுவவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.30000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1258/எச்1/2018)

29.. இந்நகராட்சியின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிக்கான தணிக்கை அறிக்கைகள் தட்டச்சு மற்றும் பைண்டிங் செய்த வகையில் செலவினம் தொகை ரூ. 15500/-ஐ ஆப்பிள் கம்யூட்டர்ஸ் திருவண்ணாமலை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 1080/2018/பி2)

30. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட தொழில்புரிவோர்க்கு தொழில்வரி 01.10.2013 முதல் 5ஆண்டுகளுக்கு 25% உயர்வு செய்திட நகர மன்றத் தீர்மான எண் 191 நாள் 06.09.2013ல் மன்றத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தொழிவரி உயர்வு செய்யப்பட்டு 5ஆண்டு முடிவடையும் தருவாயில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண் ROC No.12503/2018/R1 நாள் 21.05.2018ல் தொழில்வரி 25%க்கு குறையாமலும், அதிகபட்சமாக 35% மிகாமலும் உயர்வு செய்த கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி 35% உயர்வு செய்திட மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | அரையாண்டு வருமானம் | தற்போது வசூல் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி தொகை ரூ. | 01.10.2018 முதல் திருத்திய அரையாண்டு தொழில்வரி தொகை (35%உயர்வு) |
|---|---|---|---|
| 1 | 0001 முதல் 21000 வரை | - | - |
| 2 | 21001 முதல் 30000 வரை | 135 / - | 183 /- |
| 3 | 30001 முதல் 45000 வரை | 350 /- | 473 /- |
| 4 | 45001 முதல் 60000 வரை | 680 /- | 918 /- |
| 5 | 60001 க்கு மேல | 1035 /- | 1250 /- |

மேற்படி 35% தொழில்வரி உயர்வு செய்யும் போது ARTICLE 296. CLAUSE (2) CONSTITUTION OF INDIA -ல் ஒரு நபரால் செலுத்தப்படும் தொழிவரியானது ஆண்டுக்கு ரூ.2500/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படடுள்ளது. எனவே, மேற்படி தொழில்வரி 30% உயர்வு செய்யப்பட்ட பட்டியலில் வரிசை எண் 5-ல் குறிப்பிட்டுள்ள அரையாண்டு தொழில்வரி உயர்வு தொகை ரூ. 1398/-க்கு ரூ. 1250 /- நிர்ணயம் செய்யப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. உயர்தப்படவுள்ள தொழில்வரியினை பொது மக்கள் அறியும் வண்ணம் செய்தி தாள்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 61/99/அ2)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.